// மிக மிக அவசரம்// // நினைவூட்டு –1)

**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**

**ந.க.எண்.0883/ஆ1/2025, நாள். 03.2025.**

---

பொருள் : பள்ளிக் கல்வி – மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களின் அறிவிப்பு – "பேராசிரியர் அன்பழகன் விருது " – சிறந்த பள்ளிகளுக்கான பேராசிரியர் பெயரில் விருதுகள் வழங்குதல் தகுதியான பள்ளிகளை தெரிவு செய்து அனுப்பக் கோருதல் – தொடர்பாக

பார்வை :

1. இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை அவர்களின் செய்தி வெளியீடு எண் 2156, நாள் 30.11.2022.
2. பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், ந.க.எண்.15429/எம்/இ2/2023, நாள்.14.11.2024.
3. அரசாணை (நிலை) எண். 34 பள்ளிக் கல்வி (ப.க 5(1)) துறை நாள்.12.02.2025.
4. சென்னை –6 தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.010421/எம்2/இ2/2023, நாள்.18.02.2025.

-----

பார்வை –4ல் காணும் செயல்முறைகளில் தெரிவித்துள்ளவாறு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 30.11.2022 நாளிட்ட அறிவிப்பின்படி "கற்றல் கற்பித்தல், ஆசிரியர் திறன் மேம்பாடு, தலைமைத்துவம், மாணவர் வளர்ச்சி என பன்முகர்ச்சியினை வெளிப்படுத்தும் சிறந்த பள்ளிகளுக்கு பேராசிரியர் பெயரில் விருது வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. பார்வை 3 –ல் காணும் அரசாணையில் சிறந்த பள்ளிக்கான பேராசிரியர் அன்பழகன் விருதிற்கு தகுதியான பள்ளியினை தெரிவு செய்து விருது வழங்குதல் சார்ந்து பின்வரும் வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்ற தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசுப் பொதுத் தேர்வுகள் / திறனறித் தேர்வுகளில் பள்ளி மாணவர்களின் பங்களிப்பு, அன்றாட கற்றல் – கற்பித்தல் நிகழ்வுகள், வகுப்பறை கற்பித்தலில் தொழில்நுட்ப பயன்பாடு, கல்வி இணை செயல்பாடுகள் மற்றும் கல்விசாரா செயல்பாடுகள் மாணவர்களின் ஒட்டுமொத்த ஆளுமை வளர்ச்சிக்கு மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் உயர்கல்வியில் சேரும் மாணவர்கள் எண்ணிக்கை, விளையாட்டுப் போட்டிகள், கலைத்திருவிழா, மன்ற செயல்பாடுகளில் மாணவர்களின் பங்களிப்பு ஆகியனவற்றின் அடிப்படையிலும், பள்ளி வகுப்பறைகள் மாணவர்களின் கற்றலுக்கு ஏற்ற வகையில் இருக்கை வசதி மற்றும் தேவையான மின் மற்றும் மின்னணு சாதனங்களுடன் கூடிய ஆய்வகங்கள். வகுப்பறைகள் உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகள், விளையாட்டு மைதானம் மற்றும் அவற்றின் பயன்பாடு போதுமான எண்ணிக்கையிலான கழிப்பறைகள் மற்றும் அவற்றின் முறையான பராமரிப்பு பள்ளி வளாக தூய்மை, மாணவர்கள் உணவருந்த சுத்தமான குடிநீர் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளமை, பள்ளியின் பசுமைச் சூழல், பள்ளி காய்கறித் தோட்டம் மற்றும் அதன் பயன்பாடு நூலக பயன்பாடு ஆய்வக பயன்பாடு ஆகியவற்றையும் மதிப்பிட்டு விருதுக்குரிய பள்ளியை தெரிவு செய்யும் வகையில் கருத்துருவினை புத்தக வடிவில் தயார் செய்து 24.02.2025 –க்குள் முதன்மைக் கல்வி அலுவலக "**ஆ1**" பிரிவில் நேரில் ஒப்படைக்குமாறு தெரிவிக்கப்பட்டது. ஆனால் இதுநாள் வரை கருத்துரு பெறப்படவில்லை எனவே வருகின்ற திங்கள் கிழமை 17.03.2025 மாலை 4.00 மணிக்குள் கருத்துரு ஒப்படைக்க தெரிவிக்கப்படுகிறது.

**// ஒப்பம் //**

**முதன்மைக் கல்வி அலுவலர்,**

**வேலூர்.**

**பெறுநர் :**

அரசு / அரசு உதவி பெறும் உயர்/ மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள்.

**நகல் :**

1. மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை ) வேலூர். (தொடர் நடவடிக்கையின் பொருட்டு)
2. கோப்பிற்கு.

(பா.க)